www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11Com

11417

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். சரியான விடையைத் தேர்வு செய்யவும்.** **20×1=20**

1) இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ) போக்குவரத்து ஆ) பண்டகசாலை இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

2) தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ..............
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்
இ) சிறப்புத் தேர்ச்சி ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

3) அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம்
இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

4) தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ) வரையறு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு
இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு

5) இந்து கூட்டுக்குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
அ) கர்த்தா ஆ) கூட்டு வாரிசுதாரர் இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

6) நிறுமச்சட்டத்தின் அட்டவணை - அ (Table - A) என்பது
அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்புநிலைக்குறிப்பின் மாதிரிப் படிவம்
இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

7) நுகர்வோர் கூட்டுறவு முதன்முதலாக வெற்றிபெற்றது
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

8) அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு .............க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 75% ஆ) 60% இ) 95% ஈ) 51%

9) வங்கியாளர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல .............க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.
அ) பொருளாதார வளர்ச்சி ஆ) வர்த்தக வளர்ச்சி
இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி

10) RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50,000
இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்

11) பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக ............. பண்டகக் காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
அ) ஆவணம் ஆ) தனியார் இ) குளிர்பதன ஈ) கூட்டுறவு

12) பண்டகங்கள் ............. தடையை நீக்குகிறது.
அ) நேரம் ஆ) இடம் இ) ஆள்சார் ஈ) அறிவு

13) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு ............. ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

14) மின்னனு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ............. என அழைக்கப்படுகிறது.
அ) மின்னனு வணிகம் ஆ) இணையதளம் இ) வலைத்தளம் ஈ) வர்த்தகம்

15) சமூக பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை .............யில் வழங்குகிறது.
அ) அதிக விலை ஆ) குறைந்த விலை
இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை

16) உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ............. எனப்படும்.
அ) உள்நாட்டு வியாபாரம் ஆ) ஏற்றுமதி வியாபாரம்
இ) அயல்நாட்டு வியாபாரம் ஈ) இணைவினை

17) செலுத்து சமநிலையின் உபரி வெளிக்காட்டுவது
அ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்
ஆ) இறக்குமதி, ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்
இ) இறக்குமதி, ஏற்றுமதி இரண்டும் சமநிலைக்கு அதிகமாக இருத்தல்
ஈ) இவையனைத்தும்

Scanned with ACE Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18) இளவருடன் செய்யும் ஒப்பந்தம்
அ) செல்தகு ஒப்பந்தம் ஆ) செல்லாத ஒப்பந்தம்
இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின்பேரில்

19) கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்

20) வருமான வரி என்பது
அ) வியாபார வரி ஆ) நேரடி வரி இ) மறைமுக வரி ஈ) சேவை வரி

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**
**வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
22) பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?
23) இந்துச்சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை?
24) பன்னாட்டு நிறுவனத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகள் யாவை?
25) தானியங்கி பணம் வழங்கும் அட்டை (ATM) பற்றி நீவிர் அறிவது யாது?
26) நீர் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகள் யாவை?
27) மறுஏற்றுமதி என்பதன் பொருள் யாது?
28) தரகர் என்பவர் யார்?
29) சிறப்புப் பண்டகசாலைகள் என்றால் என்ன?
30) சரக்கு மற்றும் சேவைவரி என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×3=21**
**வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) வரையறா பொறுப்பு என்றால் என்ன?
32) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
33) அரசு நிறுமம் என்றால் என்ன?
34) மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
35) பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
36) சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. (ஏதேனும் 3)
37) பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
38) இந்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.
39) உலக வர்த்தக அமைப்பின் மூன்று நன்மைகளை குறிப்பிடுக.
40) ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)

**(அல்லது)**

பண்டைய தமிழ்நாட்டின் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.

42) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

**(அல்லது)**

கூட்டுறவு சங்கத்தின் வகைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

43) பன்னாட்டு நிறுவனத்தின் தீமைகளை விவரி. (ஏதேனும் 5)

**(அல்லது)**

பல்வேறு வகையான பண்டகக்காப்பகங்கள் யாவை? விளக்குக. (ஏதேனும் 5)

44) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)

**(அல்லது)**

பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

45) செலுத்தல் சமநிலை மற்றும் வாணிக சமநிலை இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக. **(அல்லது)**

உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

46) நேரடி வரி, மறைமுக வரி வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

காப்பீட்டின் வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)

47) பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. (ஏதேனும் 5) **(அல்லது)**

செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

----------

Scanned with ACE Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com